# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

# வெற்றிடங்கள்

**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அலுவலகத்தின் வெற்றிடம் உள்ள கீழ் குறிப்பிடப்பட்ட பதவிகளுக்காக தகுதி பெற்ற அபேட்சகர்களிடம் இருந்து 2025.10.31 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

## ஓட்டுநர் தரம் III பதவி (வெற்றிடங்கள் 08)

**தகைமைகள்:**

i. குறைந்தது இரு தடவைகளுக்கு மேற்படாது தடவைகளில் இரு (02) திறமைச் சித்திகளுடன் (C) க.பொ.த. (சா/தர) பரீட்சையில் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்

**மற்றும்**

மோட்டார் வாகன ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட கனரக வாகனங்களை செலுத்தும் அனுமதிப்பத்திரத்தை பெற்றிருத்தல் வேண்டும் என்பதோடு ஓட்டுநர் அனுமதிப்பத்திரத்தை பெற்ற பின் குறைந்தது மூன்று (03) ஆண்டுகள் வாகனத்தை செலுத்தி அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு :** U-PL 3 (III) ரூபா 48,005 – 16,490 – 55,845 p.m. (மாதம்)

(இது தவிர அரசு அங்கீகரித்த கொடுப்பனவுகள் வழங்கப்படும்)

## வீட்டு பொறுப்பாளர் மற்றும் சமையல்காரர் தரம் III பதவி (வெற்றிடம் 01)

**தகைமைகள்:-**

1. குறைந்தது இரு தடவைகளுக்கு மேற்படாத தடவைகளில் இரு (02) திறமைச் சித்திகளுடன் (C) க.பொ.த. (சா/தர) பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் மற்றும் மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட, தேசிய தொழிற் தகைமை (NVQ) தரம் 2 அல்லது 3 இற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழ், மேலுள்ள வேலைக்கு தொடர்புடைய தொழில்நுட்ப / தொழில் பயிற்சி நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**அல்லது**

2. குறைந்தது இரு தடவைகளுக்கு மேற்படாத தடவைகளில் இரு (02) திறமைச் சித்திகளுடன் (C) க.பொ.த. (சா/தர) பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் மற்றும் தொழில் தேர்ச்சி கொண்ட குறித்த துறை ஒன்றில் ஓர் (1) ஆண்டு அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு :** U-PL 2 (III) ரூபா 44,575 – 16x490 – 52,415 p.m. (மாதம்)

(இது தவிர அரசு அங்கீகரித்த கொடுப்பனவுகள் வழங்கப்படும்)

கருத்தில் கொள்ளவும்: முழு நேரம் தங்கி இருந்தல் வேண்டும்.

## வேலை உதவியாளர் தரம் III பதவி (வெற்றிடம் 08)

**தகைமைகள்: -**

குறைந்தது இரு தடவைகளுக்கு மேற்படாத தடவைகளில் இரு (02) திறமைச் சித்திகளுடன் (C) க.பொ.த. (சா/தர) பரீட்சையில் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்

**சம்பள அளவு :** U-PL 1 (III) ரூபா 42,775 – 16x450 – 49,975 p.m. (மாதம்)

(இது தவிர அரசு அங்கீகரித்த கொடுப்பனவுகள் வழங்கப்படும்)

**மேலுள்ள அனைத்துப் பதவிகளுக்கும்**

I. இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
II. பணிகளை நிறைவேற்ற உடல் மற்றும் உள தகைமையை பெற்றிருத்தல் வேண்டும்.
III. சிறந்த மற்றும் ஒழுக்க ரீதியான பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

**ஆட்சேர்ப்பு :** தொழில்முறை சோதனை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை

**வயது :** விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

மேலுள்ள வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுவது இலக்கம் 20, வோட் பிளேஸ், கொழும்பு 07 வளவில் அமைந்துள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அலுவலகத்திற்கு என்பதை கருத்தில்கொள்ளவும்.

**விண்ணப்ப நடைமுறைகள்:**

i. மேலுள்ள பதவிக்காக எழுத்து பொருட்கள் மற்றும் பரீட்சை செயற்பாட்டுக்காக மீளளிக்கப்படாத அடிப்படையில் 500 ரூபா கட்டணம் ஒன்று அறவிடப்படும். இந்தக் கொடுப்பனவு இலங்கை வங்கி டொரிங்டன் கிளையின் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இலக்கம் 0002323287 என்ற கணக்கிற்கு வைப்புச் செய்து பற்றுச்சீட்டை இணைத்து அனுப்புதல் வேண்டும்.

ii. விண்ணப்பங்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இணையதளமான www.ugc.ac.lk மூலம் தரவிறக்கம் செய்ய வேண்டும் என்பதோடு முறையாக பூர்த்தி செய்த விண்ணப்பங்களை “சிரேஷ்ட உதவிச் செயலாளர் / ஆட்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, இலக்கம் 20, வோட் பிளேஸ், கொழும்பு 07” என்ற முகவரிக்கு 2025.10.31 ஆம் திகதி 4.00 இற்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களை இட்டு அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாகக் குறிப்பிடவும்.

iii. குறித்த சான்றிதழின் பிரதிகளை உறுதி செய்து, விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

iv. மேலுள்ள இணையதளத்தில் இருந்து தரவிறக்கம் செய்யும் மாதிரிப் படிவத்திற்கு அமைய பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை மாத்திரம் கருத்தில் கொள்ளப்படுவதோடு தேவையான விபரங்களை குறிப்பிடாது இருத்தல், தெளிவற்று இருத்தல், விண்ணப்பங்கள் குறித்த திகதிக்கு பின்னர் கிடைப்பது, தகைமை மற்றும் அனுபவத்தை குறிப்பிடாது இருத்தல் மற்றும் குறித்த சான்றிதழ்களில் உறுதி செய்யப்பட்ட பிரதிகளை இணைக்காது இருத்தல் விண்ணப்பங்கள் நிராகரிப்பதற்கு காரணமாகும்.

v. அரச சேவை அல்லது கூட்டுத்தாபன சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை திணைக்கள தலைவர் மூலம் அனுப்புதல் வேண்டும்.

vi. ஓட்டுநர் பதவிக்கு விண்ணப்பிப்பதாயின் செல்லுபடியான ஓட்டுநர் அனுமதிப் பத்திரத்தின் உறுதி செய்யப்பட்ட பிரதி ஒன்றையும் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

vii. எந்த ஒரு காரணத்திற்காகவும் ஏதேனும் விண்ணப்பம் ஒன்று நிராகரிக்கப்பட்டால் அந்த விண்ணப்பம் மீண்டும் பரிசீலிக்கப்படமாட்டாது.

viii. மேற்குறிப்பிட்ட ஆட்சேர்ப்பு தொடர்பிலான இறுதி முடிவு எடுப்பது தொடர்பிலான உரிமை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வசமானது.

**செயலாளர்,**
**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு**
**இலக்கம் 20, வோட் பிளேஸ்**
**கொழும்பு 07.**
**2025.10.14 ஆம் திகதி**